# 2

# தேசிய வெளியீடும் செலவினமும்

இலங்கைப் பொருளாதாரம் 2019 ஏப்பிறலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இரண்டாம் காலாண்டின் மந்தமான செயலாற்றுகைக்கு மத்தியில் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ஏறத்தாள 3.0 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, பொருளாதாரம் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.6 சதவீதமான மெதுவான வீதத்தில் வளர்ச்சி அடைந்திருந்தது. குறிப்பாக, போக்குவரத்து போன்ற சுற்றுலா மற்றும் அதனுடன் தொடர்புடைய பணி நடவடிக்கைகள் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. ஆண்டின் முதலரைப்பகுதியில், நிதியியல் பணிகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் என்பன பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன. அதேவேளை, ஆண்டின் முதலரைப்பகுதியின் போது கட்டவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் போன்றவற்றின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சியானது கைத்தொழில் நடவடிக்கைகளில் விரிவுபடுத்தலை உத்வேகப்படுத்தியிருந்தன. மேலும், அரிசி வளர்ச்சியின் விரிவாக்கம் மற்றும் எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட கணிசமான மீட்சி என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு பெருமளவில் துணையளித்திருந்தன. முன்னோக்கி பார்க்கையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட அநேகமான நடவடிக்கைகள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதைப் பார்க்கிலும் விரைவாக மீட்சியடைகின்றதுடன் இது ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் விரைவான வளர்ச்சிக்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலை அதேபோன்று எதிர்வருகின்ற தேர்தல்களின் காரணமாக ஏற்படக்கூடிய சாத்தியமான இறை நழுவல்கள் என்பன பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகமொன்றை வழங்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியியைத் தூண்டுக்கூடும். எனினும், சில கீழ்ப்பக்க இடர்நேர்வுகளினாலும் அதேபோன்று எதிர்வருகின்ற தேர்தல்களின் காரணமாக இவ்வாண்டின் பிந்திய காலப்பகுதி மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் தோற்றம்பெறக்கூடிய நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாகவும் அண்மைக்கால வளர்ச்சிக்கான எதிர்கால வாய்ப்புக்கள் பாதிக்கப்படலாம். மேலும், சமகாலத்தில் நிகழ்கின்ற உலகப் பொருளாதார மெதுவடைதல் வெளிநாட்டுக் கேள்வியியை குறைவடையச் செய்யும் அதேவேளை சாதகமற்ற ஏதேனும் வானிலை நிலைமைகள், வேளாண்மை மற்றும் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை விளைவிக்கலாம்.

## 2019இன் அபிவிருத்திகள்

### வெளியீடு

- **பொருளாதாரம் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில், மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான பணிகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மை என்பவற்றின் நடவடிக்கைகள் முறையே 2.8 சதவீதம், 2.3 சதவீதம் மற்றும் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் காரணமாக இரண்டாம் காலாண்டில் பதிவாகிய மெதுவடைதலுக்கு மத்தியில் நிதியியல் பணிகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகங்களின் நடவடிக்கைகள் அத்துடன் ஏனைய தனியாள் நடவடிக்கைகள் என்பவற்றினால் பணிகள் துறையின் வளர்ச்சி முக்கியமாக தூண்டப்பட்டிருந்த அதேவேளை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்துப் பணிகள் என்பவற்றின் வளர்ச்சி மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தமையால் அவற்றின் நடவடிக்கைகள் சுருக்கமடைந்திருந்தன. அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சியானது ஆண்டுகாலப்பகுதியில் கட்டவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சியினால் பெருமளவில் துணைபுரியப்பட்டிருந்தது. வேளாண்மை நடவடிக்கைகள் முக்கியமாக நெல் பயிர்செய்கையின் விரிவாக்கத்துடன் இணைந்தான எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் (தெங்கு, செவ்விளநீர், மற்றும் எண்ணெய் தாவரம்) வளர்ச்சியில் ஏற்பட்ட கணிசமான மீட்சியினால் தூண்டப்பட்டிருந்தன.

வரைபடம் 2.1

காலாண்டு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்கள்(அ)




(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.

*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

- **மத்திய வங்கியின் நடுத்தரகால பேரண்ட பொருளாதாரக் கட்டமைப்பிற்கமைவாக பொருளாதாரம் 2018இல் பதிவாகிய 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் ஏறத்தாழ 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் ஏற்பட்ட பாதகமான தாக்கத்திலிருந்து பொருளாதாரம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. வியாபாரத் தோற்றப்பாடு அளவீட்டினால் வெளிப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களுக்கமைய பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயற்பாட்டு நிலைமையானது இரண்டாம் அரைப்பகுதியின் ஆரம்பத்தில் மேம்படுத்தல் ஒன்றைக் குறித்துக்காட்டுகின்ற கேள்வி எதிர்பார்க்கைகளினால் காண்பிக்கப்பட்டவாறு மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பணிகள் நடவடிக்கைகளைக் கருத்திற்கொள்கையில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினால் ஏற்பட்ட சுற்றுலாக் கைத்தொழிலின் பின்னடைவானது ஆண்டின் இரண்டாம் அரையாண்டுக் காலப்பகுதியிலும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் என்பவற்றின் வளர்ச்சியை எதிர்மறையாக பாதிக்கும். எனினும், உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு திரும்பியதுடன் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏனைய பணி நடவடிக்கைகளின் மீதான தாக்கம் மீளவழமைநிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, பிரதானமாக நிதியியல் பணிகள் மற்றும் மொத்த சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினால் பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி தூண்டப்படும். அதேவேளை, கைத்தொழில் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியானது உள்நாட்டுப் பொருளாதாரத்தின் இயல்புநிலை மற்றும் அரசாங்கத்தின் கட்டவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றம் என்பவற்றுடன் தயாரிப்பு மற்றும் கட்டவாக்க நடவடிக்கைகளின் விரிவாக்கம் பாரியளவில் துணையளிக்கப்படும். அதேவேளை, ஆண்டு முழுவதும் சாதகமான காலநிலை நிலவுமாயின் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி தொடர்ந்தும் உத்வேகம் அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **உள்நாட்டுப் பக்கத்திலிருந்து தோன்றக்கூடிய மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் குறிப்பாக 2019இன் இரண்டாம் அரைப்பகுதியின் வளர்ச்சி எதிர்வுகூறல்களை பாதிக்கக்கூடும்.** எதிர்வரும் தேர்தல்களிலிருந்து தோன்றுகின்ற எதிர்பார்க்கப்பட்ட இறை நழுவல்கள் தனியார் மற்றும் அரசாங்க நுகர்வுச் செலவினங்களைக் குறுங்காலத்தில் தூண்டக்கூடும். எனினும், தேர்தல் சுழற்சிகளிலிருந்து தோன்றுகின்ற நிச்சயமற்றத்தன்மையானது பொருளாதார நடவடிக்கைகள் மீது பாதகமான தாக்கமொன்றைக் கொண்டிருக்கக்கூடுவதுடன் தொழில் அளவீடுகளினால் வெளிப்படுத்தப்பட்டவாறு தனியார் துறை முதலீட்டுத் தீர்மானங்களையும் தாமதப்படுத்தும். எதிர்பார்க்கப்பட்டதைக்

2

காட்டிலும் பலவீனமான உலக வளர்ச்சியானது வெளிநாட்டுக் கேள்விக்கு கீழ் நோக்கிய இடர்நேர்வினைத் தோற்றுவிக்கும். அதேவேளை, நிலவுகின்ற வானிலை நிலைமைகளில் ஏற்படக்கூடிய ஏதேனும் தடங்கல்கள் முக்கிய வேளாண்மைப் பயிர்களின் வளர்ச்சி மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருப்பதுடன் உணவு பதப்படுத்தல் போன்ற ஏனைய தயாரிப்பு நடவடிக்கைகள் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து போன்ற பணிகள் நடவடிக்கைகளின் மீதும் கசிவுத்தாக்கங்களையும் கொண்டிருக்கக்கூடும்.

## பொருளாதார நடவடிக்கைகளின் வளர்ச்சி

### வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி

- **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 3.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** இவ்வளர்ச்சியானது ஆண்டின் முதலரைப்பகுதியில் எண்ணெய்ப் பசையுள்ள பழவர்க்கங்களின் வளர்ச்சியில் (தெங்கு, செவ்விளநீர், எண்ணெய்த் தாவரம்) ஏற்பட்ட கணிசமான மீட்சியினால் பெருமளவில் செழிப்படைந்திருந்தது. மேலும், அரிசி உற்பத்தி, விலங்கு உற்பத்தி, பழவர்க்கங்களின் உற்பத்தி, இறப்பர் உற்பத்தி, ஏனைய நீண்டகாலப் பயிர்களின் உற்பத்தி, மரக்கன்று இனப்பெருக்கம் மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் அத்துடன் கரும்பு உற்பத்தி என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்திருந்தன. எவ்வாறாயினும், காய்கறிகள் உற்பத்தி, காடாக்கல் மற்றும் மரம் அறுத்தல், தானியங்களின் உற்பத்தி, வாசனைத்திரவியங்களின் உற்பத்தி, மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் தேயிலை உற்பத்தி என்பன இக்காலப்பகுதியில் சுருக்கமடைந்திருந்தன.

## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: வேளாண்மை

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

- **வேளாண்மை மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் வெளியீட்டை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2019இன் முதலரைப்பகுதியில் 1.6 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.** 2018/19 பெரும்போக பருவகாலத்தில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளிலிருந்து பிரதானமாக பயனடைந்த நெல் துணைத்துறை 28.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. தெங்கு மற்றும் இறப்பர் துணைத்துறைகள் ஒட்டுமொத்த வேளாண்மை உற்பத்திக்கு சாதகமாகப் பங்களித்திருந்ததுடன் முறையே 29.3 சதவீதம் மற்றும் 4.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, தேயிலைத் துணைத்துறை 0.2 சதவீதம் கொண்ட சிறியளவான வளர்ச்சியைக் காட்டியிருந்தது. தேயிலைத் துணைத்துறையின் வளர்ச்சி ஆண்டின் முதல் காலாண்டில் நிலவிய வரட்சி வானிலை நிலமைகள் மற்றும் பெருந்தோட்ட துறையில் சம்பளப் பேச்சுவார்த்தைகளின் போது தோன்றிய தொழிலாளர் பிரச்சனைகள் என்பவற்றின் காரணமாக குறைவடைந்திருந்தது. மேலும், மீன்பிடித் துணைத்துறையானது 2018இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலப்பகுதியின் போது பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

அட்டவணை 2.1

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010=100)

| விடயம் | 2018 முதலரை(அ) | 2019 முதலரை(ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2017/18(அ) | 2018/19(ஆ) |
|---|---|---|---|---|
| **வேளாண்மை மற்றும் மீன்பிடி** | **135.5** | **137.7** | **14.8** | **1.6** |
| **1 வேளாண்மை** | **132.1** | **134.7** | **18.8** | **2.0** |
| 1.1 வேளாண்மைப் பயிர்கள் | 124.4 | 127.1 | 19.9 | 2.2 |
| நெல் | 128.2 | 164.3 | 62.6 | 28.2 |
| தேயிலை | 101.1 | 101.3 | 1.3 | 0.2 |
| இறப்பர் | 59.9 | 62.2 | -10.9 | 4.0 |
| தெங்கு | 86.0 | 111.2 | -5.5 | 29.3 |
| ஏனைய பயிர்கள் | 168.6 | 135.4 | 22.4 | -19.7 |
| இதில் மரக்கறிகள் | 170.4 | 139.5 | 30.5 | -18.1 |
| பழவர்க்கங்கள் | 183.9 | 133.1 | 12.1 | -27.6 |
| ஏனைய பயிர்கள் | 176.2 | 151.3 | 29.1 | -14.2 |
| 1.2 விலங்கு வளர்ப்பு | 192.6 | 195.0 | 13.0 | 1.2 |
| **2 மீன்பிடி** | **152.5** | **152.5** | **0.6** | **0.0** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

### நெல்

- **கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய, நெல் உற்பத்தியானது 2018இன் 3.9 மில்லியன் மெற்றிக் தொன்னுடன் ஒப்பிடுகையில் 2019இல் 4.6 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 17.4 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** ஆண்டின் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பானது 2018/19 பெரும்போக பருவகாலத்தின் 28.2 சதவீதமான உற்பத்தி அதிகரிப்பு மற்றும் 2019 சிறுபோகத்தில் மதிப்பிடப்பட்ட 0.5 சதவீத வளர்ச்சி என்பவற்றின் இணைந்த பெறுபேறாகும். அதற்கமைய, 2018/19 பெரும்போக பருவகாலம் மற்றும் 2019 சிறுபோக பருவகாலங்களின் மதிப்பிடப்பட்ட உற்பத்தியானது முறையே 3.1 மில்லியன் மெற்றிக் தொன்கள் மற்றும் 1.5 மில்லியன் மெற்றிக் தொன்களாகும். மதிப்பிடப்பட்ட வருடாந்த மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 67 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற 2018/19 பெரும்போக பருவகாலத்தில் பதிவாகிய அபரிமிதமான அறுவடைக்கு, சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் பயிரிடப்பட்ட அத்துடன் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட

2

அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக அதிகரித்த நெல் விளைச்சல்களின் காரணமாக அமைந்திருந்திருக்க முடியும். அதேவேளை, உத்தரவாதமளிக்கப்பட்ட நெல் கொள்வனவுத் திட்டமும் எல்லை நிலங்களை நெற்பயிர்ச் செய்கைக் காணிகளாக மாற்றுவதற்கு வேளாண்மையாளர்களுக்கு ஊக்கமளித்திருந்தது. 2018/19 பெரும்போக பருவகாலத்தின் போது விதைக்கப்பட்ட பரப்பானது கடந்த ஆண்டின் தொடர்பான பருவகாலத்தைக் காட்டிலும் 12.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்த அதேவேளை அறுவடைசெய்யப்பட்ட பரப்பானது 16.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதேவேளை, நெல் சந்தைப்படுத்தல் சபை 2017/18 பெரும்போக பருவகாலத்தில் கொள்வனவு செய்திருந்த 4,605 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2018/19 பெரும்போக பருவகால அறுவடையிலிருந்து ஏறத்தாழ 50,000 மெற்றிக்தொன் நெல் இருப்பினை கொள்வனவு செய்திருந்தது. 2.9 மில்லியன் மெற்றிக்தொன் அரிசிக்குச் சமமானதென மதிப்பிடப்பட்ட வருடாந்த நெல் உற்பத்தியானது ஏறத்தாழ 15 மாதங்களுக்குத் தேவையான நாட்டின் வீட்டலகுக்கான அரிசிக் கேள்வியை பூர்த்திசெய்வதற்கு போதுமானதாகவிருக்கும். அதேவேளை, 2019இன் முதலரைப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவானது கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட 239,519 மெற்றிக்தொன்களுடன் ஒப்பிடுகையில் 11,066 மெற்றிக்தொன்களாக மாத்திரமே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் உதவுதொகையாக வளமாக்கி வழங்கும் மானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் இடம்பெற்றிருந்ததுடன் மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 930,481 நெற் பயிர்செய்கையாளர்களுக்கு ஏறத்தாழ 197,000 மெற்றிக்தொன் வளமாக்கிகள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், வேளாண்மையாளர்கள் தமக்குத் தேவையான நெல் விதைகளை உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிக்கும் நோக்கிலும் நெற்பயிர்ச்செய்கையின் போது ஏற்படும் இழப்புக்களை குறைக்கும் நோக்கிலும் அதனூடாக உற்பத்தித்திறனை

வரைபடம் 2.2

நெல் உற்பத்தி




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

மேம்படுத்தும் நோக்கில் வேளாண்மையாளர்களின் மத்தியில் நெல் விதைகளுக்கு மேலதிகமாக பரசூட் தட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

- **2018/19 பெரும்போக பருவகாலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகரித்த நெல் அறுவடையானது திறந்த சந்தையில் நெல் விலைகளின் குறைவிற்கு இட்டுச்சென்றிருந்ததுடன் இது அரிசியின் சில்லறை விலைகளின் குறைவதற்கு வழிவகுத்திருந்தது.** சம்பா நெல்லின் சராசரி திறந்த சந்தை விலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் ரூ.39.20இற்கு 23.7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த அதேவேளை நாட்டரிசி நெல்லின் சராசரி விலை 2018இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து கிலோ கிறாமொன்றிற்கு ரூ.38.21ஆக காணப்பட்டது. அதேவேளை, சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலையானது ஆண்டின் முதலரைப்பகுதியில் கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.106.25ஆக பதிவாகியிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.0 சதவீத வீழ்ச்சியாகும். நாட்டரிசியின் சராசரி சில்லறை விலை கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.90.90ஆக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீத வீழ்ச்சியாகும்.

## தேயிலை

- **2019இன் முதலரைப்பகுதியில் தேயிலை உற்பத்தி 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 158.2 மில்லியன் கிலோ கிறாம்களுடன் ஒப்பிடுகையில் 158.5 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 0.2 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவில் அதிகரித்திருந்தது.** இது முக்கிய தேயிலைப் பயிரிடப்படும் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக 2019இன் முதலாம் காலாண்டில் ஏற்பட்ட 1.2 சதவீத வீழ்ச்சி மற்றும் சாதகமான வானிலை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு ஆண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதமான வளர்ச்சி என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவாக காணப்படுகின்றது. மொத்த தேயிலை உற்பத்தியில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற உயர் நிலத் தேயிலை உற்பத்தியானது 2019இன் முதலரைப்பகுதியில் 4.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும், மொத்த உற்பத்தியில் 78.0 சதவீதத்திற்கு கூட்டாகப் பங்களிப்புச் செய்கின்ற மத்திய நிலம் மற்றும் தாழ் நிலம் ஆகிய இரண்டிலுமிருந்தான உற்பத்தியானது முக்கியமான தாழ் மற்றும் மத்திய வளர்ப்பு பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த சாதகமான வானிலை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு முறையே 4.3 சதவீதம் மற்றும் 0.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, 2019இன் முதல்

வரைபடம் 2.3

தேயிலை உற்பத்தி




*மூலம்:* இலங்கைத் தேயிலைச் சபை

எட்டு மாதங்களில், தேயிலை உற்பத்தியானது முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து 209.2 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு அதிகரித்திருந்தது. இலங்கை தேயிலைச் சபை 10 ஏக்கர் பரப்புகளுக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களுக்கான தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மானிய திட்டம் மற்றும் தேயிலை மீள்நடுகை மானியத் திட்டம் என்பவற்றை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. அறுவடைக்குப் பிந்திய இழப்புகளைக் குறைத்தல் மற்றும் சராசரி சிறந்த கொழுந்து நியமங்களை தரமுயர்த்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்ட 'சிறந்த கொழுந்து 60' என்ற நிகழ்ச்சித்திட்டம் 2019இன் முதலரைப்பகுதியில் தொடர்ந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, இலங்கை தேயிலைச் சபையானது நிராகரிக்கப்பட்ட தேயிலை வர்த்தகம் மற்றும் சீனி கலந்து பதப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தி போன்ற கள மட்டத்திலான ஒழுங்கீனமற்ற நடவடிக்கைகளை குறைப்பதற்காக தேவையான ஏற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.

- **2019இன் முதலரைப்பகுதியில் தேயிலை விலைகள் கொழும்பு தேயிலை ஏலத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்திருந்தன.** 2019இன் முதலரைப்பகுதியில் சராசரி தேயிலை விலைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுமிடத்து கிலோ கிராம் ஒன்றிற்கு ரூ.560.73இற்கு 7.3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. கொழும்புத் தேயிலை ஏலத்தில் சராசரி தேயிலை விலைகளில் அதிகூடிய ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியானது மத்திய நிலத் தேயிலையில் (10.4 சதவீதத்திற்கும்) பதிவுசெய்திருந்ததுடன் அதனைத் தொடர்ந்து உயர் நிலத் தேயிலை (8.1 சதவீதம்) மற்றும் தாழ்நிலத் தேயிலைகளில் (6.3 சதவீதம்) பதிவாகியிருந்தது. உள்நாட்டுத் தேயிலை விலைகளின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு பிரதானமாக கொழும்பு தேயிலை ஏலத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகரித்த தொகைகளுடன் இணைந்து நொறுக்கி கிழித்து சுருட்டிய வகைத் தேயிலை போன்ற மலிவான மாற்றுவழி உற்பத்திகளை நோக்கி நகருகின்ற பாரியளவிலான கொள்வனவாளர்களிடமிருந்தான ஒப்பீட்டளவில் குறைவான கேள்வியும் காரணமாகியிருந்தன. எனினும், விற்பனையாளர்கள் மரபுவழித் தேயிலையில் விசேடத்துவம் பெற்றுள்ளனர். தேயிலை விலைகளில் ஏற்பட்டுச்செல்லும் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கு இசைந்து செல்லும் வகையில் சிறு உடைமையாளர்களால் பச்சைக் கொழுந்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரி விலை கிலோ கிராம் ஒன்றிற்கு 2018இன் முதலரைப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ.88.63இலிருந்து 2019இன் முதலரைப்பகுதியில் ரூ.81.92இற்கு குறைவடைந்திருந்தது. அதேவேளை, தேயிலை ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட தீர்வியினை கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.3.50இலிருந்து ரூ.3.00இற்கு குறைப்பதற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவிற்கு அமைச்சர்களின் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

## இறப்பர்

- **இறப்பர் உற்பத்தி சாதகமான வானிலை நிலைமைகளின் பிரதான காரணமாக 2019இன் முதலரைப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 41.8 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** 2019இன் முதலரைப்பகுதியில், கிறேப் இறப்பர் உற்பத்தி 9,128.3 மெ.தொன்களுக்கு 32.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்த அதேவேளை, விரிப்பு இறப்பர் உற்பத்தி 20,878.6 மெ.தொன்களுக்கு 4.0 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, மொத்த இறப்பர் உற்பத்தியில் 28.0 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற குறித்துரைக்கப்படாத வகைகளின் உற்பத்தி 2019இன் முதலரைப்பகுதியில் 11,750.3 மெ.தொன்களுக்கு 11.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், 2019இன் முதல் எட்டு மாதங்களில் இறப்பர் உற்பத்தியானது 53.3 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 0.3 சதவீதமான சிறிதளவான வீழ்ச்சியை பதிவுசெய்திருந்தது. இறப்பர் உற்பத்தியினை 2018இல் 82,560 மெற்றிக்தொன் உற்பத்தியிலிருந்து 2040ஆம் ஆண்டளவில் 200,000 மெற்றிக்தொன்களாக அதிகரிப்பதற்கு இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் அதன் நடவடிக்கைத் திட்டத்தினை முன்னெடுத்திருந்தது. அமைச்சரவைத் தீர்மானத்தினதும் 2019இற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவினதும் நோக்கில், இறப்பர் மீள்நடுகைக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளை இரட்டிப்பாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2019 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் எக்டேயர் ஒன்றிற்கான மீள்நடுகை உதவுதொகைக் கொடுப்பனவு மற்றும்

2

புதிய நடுகைக்கான உதவுதொகை கொடுப்பனவு என்பன முறையே முறையே ரூ.350,000ஆகவும் ரூ.300,000ஆகவும் அதிகரிக்கப்பட்டன.

- **இயற்கை இறப்பரின் சராசரி விலைகள் உலக மற்றும் உள்நாட்டு சந்தைகள் ஆகிய இரண்டிலும் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.** உலக சந்தையில் இயற்கை இறப்பர் விலைகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா - சீனா நாடுகளுக்கிடையேயான வர்த்தக பதற்றங்களின் காரணமாக உலகக் கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவு பிரதான காரணமாக அமைந்திருந்தது. அதேவேளை, மீளாய்வுக்காலப்பகுதியில் கொழும்பு இறப்பர் ஏலத்தில் படைகளாக்கப்பட்ட புகையூட்டிய விரிப்பு இறப்பர் இல.1 இன் கிலோ கிறாம் ஒன்றிற்கான சராசரி விலை ரூ.270.80இற்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை இறப்பர் பால் கிறப் ஐஓஇன் சராசரி விலை கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூ.266.13ஆக 18.3 சதவீதத்தினால் வீழச்சியடைந்திருந்தது.

## தெங்கு

- **தெங்கு உற்பத்தி 2018இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 1,575 மில்லியன் காய்களுக்கு 29.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** 2018இன் இறுதிக்காலாண்டின் போது அனைத்து தெங்கு பயிரிடப்படும் பிரதேசங்களிலும் நிலவிய சாதகமான மழைவீழ்ச்சியின் காலங்கடந்த தாக்கம் தெங்கு உற்பத்தியின் அதிகரிப்பிற்கு பெருமளவில் பங்களித்திருந்தது. அதற்கமைய, தேங்காய் துருவல் உற்பத்தி 22,023 மெற்றிக் தொன்களுக்கு 160.3 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2019இன் முதலரைப்பகுதியில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 25,852 மெற்றிக் தொன்களுக்கு 806.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேபோன்று ஆலைகளை தற்காலிகமாக மூடியமையின் அடிப்படைக் காரணமாக 2018இல் இயலளவுக்குக் கீழ் தொழிற்பட்ட வேஜின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 2019இன் முதலரைப்பகுதியில் 6,725 மெற்றிக்தொன்களுக்கு 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், தேங்காய் கிரீம், பால்மா மற்றும் திரவத் தேங்காய் பால் உற்பத்தி என்பன மீளாய்வுக் காலப்பகுதியின் போது 31,930 மெற்றிக்தொன்களுக்கு 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, தெங்கு உற்பத்தியானது 2018இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 1,679.3 மில்லியன் காய்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாதங்களில் 2,105.8 மில்லியன் காய்களுக்கு 25.4 சதவீதத்தினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2019இன் முதலரைப்பகுதியில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை துணைப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல், வியாபாரம் மற்றும் நிதியியல் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்பம் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்றவற்றின் ஊடாக சிறியளவிலான மற்றும் முறைசாரா தெங்குத் துறைக்கு தொடர்ந்தும் ஆதரவினை வழங்கியிருந்தது.

- **பதப்படுத்தாத தேங்காய்களுக்கு அதிகரித்துவரும் கைத்தொழில் கேள்விக்கு மத்தியில் தேங்காய் மற்றும் தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகள் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் குறைவாகக் காணப்பட்டன.** காய் ஒன்றிற்கான உடன் தேய்காய்களின் சராசரி சில்லறை விலை கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ.77.61உடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் ரூ.51.60ஆக இருந்தது. அதேவேளை, 750 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் சராசரி விலை, அதிகரித்த உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் அதிகரித்த தாவர எண்ணெய் இறக்குமதி என்பவற்றினால் துணையளிக்கப்பட்டு, ஆண்டின் முதலரைப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகியிருந்த சராசரி விலை ரூ.288.56இலிருந்து ரூ.262.58இற்கு குறைவடைந்திருந்தது. மேலும், கொழும்பு தேங்காய் ஏலத்தில் தேங்காய் துருவலுக்கான சராசரி விலை கிலோ கிராம் ஒன்றிற்கு 2018இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய ரூ.476.30இலிருந்து ரூ.250.08இற்கு 47.5 சதவீதத்தினால் குறைவடைந்தது. பன்னாட்டுச் சந்தையில் தேங்காய் துருவலுக்கான சராசரி ஏற்றுமதி விலையானது கிலோ ஒன்றிற்கு முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ.534.45இலிருந்து 2019 முதலரைப்பகுதியில் ரூ.275.24இற்கு குறைவடைந்திருந்தது.

## ஏனைய களப் பயிர்கள்

- **ஏனைய களப் பயிர்கள் உற்பத்தியானது 2019இன் முந்திய காலப்பகுதியில் மோசமான வானிலை மற்றும் படைப்புழு நோய்த்தொற்று மூலம் ஏற்பட்ட பாரிய பயிர் அழிவுகளின் காரணமாக 2018/19 பெரும்போக பருவகாலத்தில் 369,488 மெற்றிக்தொன்களுக்கு 13.9 சதவீதத்தினால் குறைவடைந்தது.** பிரதானமாக பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் காரணமாக பெரிய வெங்காயம், மிளகாய், தட்டைப் பயறு, பச்சைப் பயறு, குரக்கன் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்களின் உற்பத்தியானது 2018/19 பெரும்போக பருவகாலத்தின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. படைப்புழு நோய்ப்பரவலின் காரணமாக ஏறத்தாழ 75,000 மெற்றிக்தொன்களாக மதிப்பிடப்பட்ட பாரிய பயிர் சேதங்களின் பிரதான காரணமாக சோள உற்பத்தியும் 2018/19 பெரும்போக பருவகாலத்தில் 220,425 மெற்றிக்தொன்களுக்கு 9.3

சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மேலும், நிலக்கடலை, தட்டைப் பயறு, பச்சைப் பயறு என்பவற்றிலும் உற்பத்தி இழப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. எனினும், 2019 சிறு போகத்தின் போது ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியானது மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கமத்தொழில் திணைக்களமானது படைப்புழு நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை படைப்புழுத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வேளாண்மையாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

### காய்கறிகள்

- **2018/19 பெரும்போக பருவகாலத்தில் காய்கறிகள் உற்பத்தி 835,741 மெ.தொன்களுக்கு 15.2 சதவீதத்தினால் குறைவடைந்தது.** எனினும், 2019இன் முதலரைப்பகுதி முழுவதும் பெரும்பாலான மாவட்டங்களில் நிலவிய வரட்சியான வானிலை நிலைமைகள் மற்றும் பயிர் சேதங்களை விளைவிக்கின்ற படைப்புழு நோய்ப் பரம்பல் என்பவற்றுக்கு மத்தியில் சந்தைக்கான காய்கறிகளின் வழங்கல் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டதுடன் ஆண்டின் முந்திய பகுதியில் காய்கறி விலைகளை ஒப்பீட்டளவில் குறைவான மட்டத்தில் பேணுவதற்கு இயலச்செய்திருந்தது. மேலும், மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதங்களின் போது தொடர்ந்திருந்த 2018/19 பெரும்போக அறுவடையிலிருந்தான குறைவான காய்கறி வழங்கல், புதுவருட பருவகாலத்தின்போது காய்கறிகள் விலைகளின் மீதான அழுத்தத்தை அதிகரித்திருந்தது. 2019இன் இரண்டாம் காலாண்டின் பிந்திய பகுதியில் அவதானிக்கப்பட்ட தாழ் மற்றும் மலைநாட்டு காய்கறிகளின் விலைகளில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சிப்போக்கானது மழையுடன்கூடிய வானிலை நிலைமைகளிலிருந்து தோன்றிய மட்டுப்படுத்தப்பட்ட வழங்கலின் பிரதான காரணமாக 2019இன் மூன்றாம் காலாண்டின் தொடக்கத்தில் திரும்பலடைந்திருந்தது.
- **தேசிய வேளாண்மைக் கொள்கைக்கமைவாக கமத்தொழில் அமைச்சு மற்றும் அதன் முகவராண்மைகள் வேளாண்மை உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காகவும் வேளாண்மைக்கான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் பிரபல்யப்படுத்துவதற்காகவும் பல்வேறுபட்ட வழிமுறைகளை எடுத்திருந்தன.** அதற்கமைய பீடைகளை முன்கூட்டியே கண்டுபிடித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் வழிமுறைகள் மீது வேளாண்மையாளர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும், சோளம், பெரிய வெங்காயம், பச்சைப் பயறு, தட்டைப் பயறு போன்ற ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு சான்றுபடுத்தப்பட்ட விதைகள் மற்றும் துளி நீர்ப்பாசனம் என்பன வேளாண்மையாளர்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தப்பட்ட அதேவேளை ஆர்வலர்கள் மத்தியில் சிறந்த வேளாண்மை நடைமுறைகளும் ஊக்குவிக்கப்பட்டன.

### சீனி

- **சீனி உற்பத்தி 2019இன் முதலரைப்பகுதியில் 24,233 மெற்றிக் தொன்களுக்கு 95.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** லங்கா சுகர் கம்பனி பிறைவேற் லிமிடெட்டின் செவணகல மற்றும் பெல்வத்த பிரிவுகள் மற்றும் கல்லோயா (கிங்குரான) சுகர் இன்டஸ்ரீஸ் லிமிடெட் ஆகிய மூன்று தொழிற்சாலைகளும் சாதகமான வானிலை நிலைமைகள், கரும்பு பயிர்ச் செய்கைத் திட்டங்களின் முறையான நடைமுறைப்படுத்தலின் காரணமாக அதிகரித்த கரும்புகளின் வழங்கல் மற்றும் அதிகரித்த பயிர்செய்கைப் பரப்பு போன்றவற்றின் பிரதான காரணமாக உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பினை பதிவுசெய்திருந்தன. அதற்கமைய, செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையே 60.4 சதவீதத்தினாலும் 70.8 சதவீதத்தினாலும் அதிகரித்த அதேவேளை கல்லோயா தொழிற்சாலையில் சீனி உற்பத்தி 293.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2019இல் மொத்த சீனி உற்பத்தி 65,690 மெற்றிக்தொன்களாக 28.5 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது நாட்டின் மொத்த உள்நாட்டு சீனித் தேவைப்பாட்டில் ஏறக்குறைய 11 சதவீதத்திற்குச் சமமானதாகும். அதேவேளை, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு சீனிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்த அதேவேளை சீனி ஆராய்ச்சி நிறுவனமானது வளமாக்கிகளின் பிரயோகம், பீடை மற்றும் நோய் முகாமைத்துவம் மற்றும் வளம்குன்றிய மண்ணை மேம்படுத்தல் போன்றன உள்ளடங்கலாக பயிர் முகாமைத்துவம் தொடர்பான அவசியமான தொழில்நுட்ப அறிவினை வழங்குவதில் தொடர்ந்தும் அதன் பணிகளை வழங்கியிருந்தது.

### விலங்கு வளர்ப்பு

- **பால் உற்பத்தி கடந்த வருடத்தின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 253.9 மில்லியன் லீற்றரிற்கு 6.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.** இவ்வளர்ச்சிக்கு விலங்கு வளர்ப்புத் துறை முதன்மைத் திட்டத்தின் கீழ் பிரபல்யப்படுத்தப்பட்ட சிறந்த மாடு வளர்ப்பு நடைமுறைகள் காரணமாக அமைந்தன. அதேவேளை, லீற்றர் ஒன்றிற்கான பாலின் சராசரி உற்பத்திச் செலவு சத்துசேர்க்கப்பட்ட விலங்குத்தீன் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக அதிகரித்திருந்ததுடன் இது பாலின் சராசரி பண்ணைப்

2

விலையின் உயர்விற்கும் இட்டுச்சென்றிருந்தது. 2019இல் பால் உற்பத்தி 517 மில்லியன் லீற்றர்களாக ஏறத்தாழ 10 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றதுடன் இது மொத்த உள்நாட்டு கேள்வியில் ஏறத்தாழ 43 சதவீதத்தினை பூரணப்படுத்துவதற்கு போதுமானதாக இருக்கும். கோழி இறைச்சி உற்பத்தியானது 2019இன் முதலரைப்பகுதியில் 111,480 மெற்றிக்தொன்களுக்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், புறையிலர் தாய்க் கோழி உற்பத்தியானது 2019இன் முதலரைப்பகுதியில் ஏறத்தாழ 24 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்ததுடன் இது கோழி இறைச்சி உற்பத்தியின் வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களித்திருந்தது. அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக உணவு விடுதிகளிலிருந்தன குறைவான கேள்வியின் விளைவாக முட்டை உற்பத்தி 1,324 மில்லியனுக்கு 14.1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### மீன்பிடி

- **மீன் உற்பத்தி 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரையாண்டில் 254.5 மில்லியன் கி.கிறாம்களுக்கு 0.03 சதவீதத்தினால் சிறிதளவால் மாத்திரம் அதிகரித்திருந்தது.** கரையோர மீன் உற்பத்தி குறிப்பாக வானிலையுடன் தொடர்புபட்ட தடங்கல்களின் காரணமாக மீளாய்வுக் காலப்பகுதியின் போது 119,250 மெற்றிக்தொன்களுக்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கடல்சார் மீன் உற்பத்தியும் 3.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கடல்சார் மீன் உற்பத்தியின் வீழ்ச்சியானது ஆண்டின் முதலரைப்பகுதியின் போது 93,690 மெற்றிக்தொன்களுக்கு 7.4 சதவீதத்தினால் ஆழ்கடல் மீன் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையினால் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. எனினும், இறால் பண்ணைகள் உற்பத்தி 11.5 சதவீதத்தினால் குறைவடைந்த போதிலும் நன்னீர் மீன்பிடி, நீரியல் வள உற்பத்தி என்பன முறையே 28.5 சதவீதத்தினாலும் 18.1 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. நன்னீர் மீன் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பிற்கு பிரதான நீர் தேக்கங்களில் நீர்மட்டங்கள் குறைவாக இருந்தபோதிலும் மீன்பிடிக்கும் பிரதேசங்கள் அதிகரித்தமைக்கு 2019இன் ஆரம்பப் பகுதியின் போது நிலவிய வரட்சியான வானிலை நிலைமைகள் முக்கிய தூண்டுதலாக அமைந்திருந்தன. மேலும், 2018இல் மீன் குஞ்சிகளை குளங்களுக்கு விடுவித்தலில் ஏற்பட்டிருந்த அதிகரிப்பும் அதிகரித்த உற்பத்திக்கு பங்களித்திருந்தது. மேலும், 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் மொத்த மீன் உற்பத்தி 336,420 மெற்றிக்தொன்களுக்கு 0.6 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்திருந்தது. நன்னீர் மீன் மற்றும் நீரியல் வள உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன், தேசிய நீரியல்வள அதிகாரசபையின் கூட்டிணைப்புடன் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு மீன் குஞ்சுகள், நன்னீர் கூனி இறால் உற்பத்தியினை அதிகரித்தல், சமுதாயப் பங்கேற்புடன் நீர்நிலைகளை முறையாக முகாமை செய்தல் மற்றும் சமுதாய அடிப்படையில் அமைந்த சிறிய குஞ்சு பொரித்தல் நிலையங்களை உருவாக்குதல் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்திருந்தது. வரண்ட வலய நீர்த்தேக்கங்களில் வளர்ப்பு அடிப்படையில் அமைந்த மீன்பிடியினை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் மீளாய்வுக்குக் காலப்பகுதியில் தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகாரசபை இருபது நீர்த்தேக்கங்களைப் புனரமைத்து 220,750 மீன் குஞ்சுகளையும் 118,000 நன்னீர் கூனி இறால்களையும் உற்பத்தி செய்திருந்தது.

### கைத்தொழில்கள்

- **கைத்தொழில் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 2.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன.** கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மீட்சி கைத்தொழில் நடவடிக்கைகளில் இவ்விரிவாக்கத்திற்கு முதன்மையாகத் துணையளித்திருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் முதலரைப்பகுதியின் போது தயாரித்தல் நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தன. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகளைக் கருத்திற்கொள்கையில், மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல்களை வழங்கும் நடவடிக்கைகள், வடிகால்கள், கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றல் நடவடிக்கைகள் மற்றும் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் என்பனவும் இக்காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாதகமாக பங்களிப்புச் செய்திருந்தன.

- **கட்டவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் மீளெழுச்சியானது 2019இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளில் விரிவாக்கத்திற்கு பிரதானமாகப் பங்களித்திருந்தது.** கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய முறையே 0.8 சதவீதம், 1.2 சதவீதம் கொண்ட சுருக்கமடைதலுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் முறையே 4.7 சதவீதத்தினாலும் 2.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. கட்டடவாக்க நடவடிக்கைகளில் இம்மீட்சியானது 2018இன் தொடர்பான காலப்பகுதியில் சிமேந்து கிடைக்கப்பெறும் தன்மையில் பதிவாகிய 0.7 சதவீத சுருக்கத்திற்கு எதிராக 2019இன் முதலரைப்பகுதியில் 3.9 சதவீத அதிகரிப்பின் மூலம் பிரதிபலிக்கப்பட்டது. தயாரித்தல் நடவடிக்கைகள, 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 3.7 சதவீத

வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 0.9 சதவீதமான மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்திருந்தது. 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் இம்மிதமான போக்கிற்கு தளபாடங்கள் தவிர்ந்த மரம் மற்றும் மர உற்பத்திகள் அத்துடன் கரி தயாரித்தல் மற்றும் உணவு, குடிபானங்கள் அத்துடன் புகையிலை உற்பத்திகள் என்பவற்றின் தயாரிப்பில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியுடன் இணைந்த அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தயாரித்தல் என்பனவற்றில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியானது முக்கிய காரணமாக அமைந்திருந்தது. அதேவேளை, கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் தயாரித்தல், புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு, தளபாடம் தயாரிப்பு மற்றும் ஏனைய உலோகமல்லாக் கனிம உற்பத்திகளின் தயாரிப்பு என்பன ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்திருந்தன. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள் தொடர்பில், மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் வழங்கல் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன. மேலும், நீர் சேகரித்தல், சுத்திகரித்தல் மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் கழிவு சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் நடவடிக்கைகள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய முறையே 2.5 சதவீத மற்றும் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் முறையே 6.9 சதவீதத்தினாலும் 8.7 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்திருந்தன.

## உற்பத்திப் போக்குகளும் நிறுவன ரீதியான ஆதரவும்: தயாரிப்பு நடவடிக்கைகள்

### கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

- **தயாரிப்புத்துறை 2019இன் முதலரைப்பகுதியில் முக்கிய துணைத் துறைகளின் அதிகரித்த உற்பத்தியுடன் சிறிதளவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி, தயாரித்தல் துறையானது முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் போது 1.4 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த விரிவடைதலினை காண்பித்தது. புடவை தயாரித்தல், அணியும் ஆடைகள், குடிபானங்கள், கற்கரி மற்றும் பெற்றோலிய உற்பத்திகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய உலோகமல்லாத கனிப்பொருட்கள் உற்பத்திகள் உள்ளடங்கலாக கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் பல துணைத்துறைகள் விரிவடைந்திருந்த அதேவேளை

வரைபடம் 2.4

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

உணவு உற்பத்திகள், புகையிலை உற்பத்திகள், தளபாடம் தவிர்ந்த மர உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அமைப்புருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பவற்றின் தயாரித்தல் உள்ளடங்கலாக ஏனைய துறைகள் ஆய்வுக் காலப்பகுதியின் போது உற்பத்தியில் சுருக்கமொன்றைக் காண்பித்திருந்தன.

- **உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் பகுதியளவில் பாதிக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் பாரிய துணைத்துறையான உணவு உற்பத்திகள் துணைத்துறை, முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகிய விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் போது மெதுவடைந்திருந்தது.** மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது, உணவு உற்பத்திகள் துணைத்துறை மாச்சு மற்றும் மே மாதங்கள் தவிர ஏனைய மாதங்களில் மெதுவடைவொன்றைப் பதிவுசெய்திருந்தது. ஒட்டுமொத்தமாக, இத்துணைத் துறை 2018இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 2.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் போது 2.8 சதவீத சுருக்கமொன்றினைப் பதிவுசெய்திருந்தது. குறைவான கேள்வியினால் உந்தப்பட்டிருந்த தகரத்திலடைக்கப்பட்ட மீன், கோழிறைச்சி உற்பத்திகள், பால்மா, கோதுமை மா மற்றும் ஐஸ்கிறீம் போன்ற பொருட்களின் குறைவான உற்பத்தி, உணவு உற்பத்தியின் மெதுவடைவிற்கு பங்களித்திருந்தது.
- **முக்கிய மரபுசார்ந்த ஏற்றுமதிச் சந்தைகளின் மெதுவான வளர்ச்சிக்கு மத்தியில் ஆடை மற்றும் புடவை ஏற்றுமதிக் கைத்தொழில்கள் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கொண்டிருந்தன.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கிற்கு வகைகூறுகின்ற அணியும் ஆடைகள் துணைத்துறையின் தயாரிப்பானது முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின்

போது 2.8 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, 2018இன் முதலரைப்பகுதியில் மெதுவடைதல் ஒன்றினைக் காண்பித்திருந்த புடவைகள் உற்பத்தி தயாரிப்பானது அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு வலுவான வெளிநாட்டுக் கேள்வியினால் துணையளிக்கப்பட்டு 2019இல் விரிவாக்கமொன்றினை அவதானித்திருந்தது. முடிவுறுத்தப்பட்ட துணிகள் மற்றும் துணி அச்சிடுதல் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்தியானது புடவைக் கைத்தொழிலில் சாதகமான முன்னேற்றங்களுக்கு பிரதானமாகப் பங்களித்தன.

- **இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தை ஒட்டுமொத்தமாக உள்ளடக்குகின்ற கற்கரி மற்றும் சுத்திகரிக்கபட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பானது 2019இன் முதலரைப்பகுதியில் விரிவாக்கமொன்றிற்குத் திரும்பியிருந்தது.** சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் வினைத்திறன், நம்பகத்தன்மை மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் மூன்று முக்கிய தொழிற்சாலைப் பிரிவுகளில் அதாவது செயன்முறைப்படுத்தல் பொறித்தொகுதி, பயன்பாட்டுப் பணிகள் மற்றும் தாங்கிப் பண்ணை என்பவற்றில் 2018இன் முதலாவது காலாண்டின் போது இடம்பெற்ற சுத்திகரிப்புச் சாலை மீள் புதுப்பித்தல் செயற்றிட்டத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் இயலளவு பயன்பாட்டினை மேம்படுத்தியுள்ளது. அதற்கமைய, பெற்றோல், ஒட்டோ டீசல், உலை எண்ணெய் மற்றும் தார் போன்றவற்றின் அதிகரித்த உற்பத்தியுடன் கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத்துறை முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகிய 3.9 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 23.0 சதவீதமான குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றினைக் காண்பித்திருந்தது. உலக சந்தையில் ஏற்படும் விலை அசைவுகளை பொறுத்து பெற்றோலிய உற்பத்திகளை உள்நாட்டில் சுத்திகரித்தலானது சிலசந்தர்ப்பங்களில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளை இறக்குமதி செய்வதைக் காட்டிலும் இலாபகரமானதாகும். தற்போது காணப்படுகின்ற இயலளவைப் பயன்படுத்தி நாட்டின் உள்நாட்டு எரிபொருள் தேவையில் ஏறத்தாழ 30 சதவீதத்தை மாத்திரமே சுத்திகரிக்கக்கூடியதாக இருப்பதனால் அதன் உற்பத்திக் இயலளவை அதிகரிப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இயலச்செய்கின்ற இயந்திர தரமுயர்த்தல் மற்றும் அதன் இயலளவை விரிவடையச் செய்தல் என்பவற்றின் ஊடாக சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தினை நவீனமயப்படுத்துவது இன்றியமையாததாகும். சிங்கப்பூர் மற்றும் ஓமான் முதலீட்டாளர்களினால் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தில் நிறுவப்படவுள்ள முன்மொழியப்பட்ட புதிய சுத்திகரிப்புச் செயற்றிட்டங்கள் நடுத்தரகாலத்தில் நாட்டில் அதிகரித்து வருகின்ற பெற்றோலிய சுத்திகரிப்பு இயலளவிற்கு துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் 2.5

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

- **ஏனைய உலோகமல்லாத கனிமங்கள் உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத்துறையானது 2019இன் முதலரைப்பகுதியில் மீட்சியடையும் சமிக்ஞைகளைக் காண்பித்திருந்தது.** இத்துணைத்துறையானது 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.6 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 7.0 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. சிமேந்து, கண்ணாடி போத்தல்கள் மற்றும் பீங்கான் மேசைவிரிப்புக்கள் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்தி இத்துணைத் துறையின் சாதகமான முன்னேற்றங்களுக்கு பெருமளவில் பங்களித்தது. இத்துணைத் துறையில் முக்கிய பங்காற்றுகின்ற உள்நாட்டு சிமேந்து உற்பத்தி, 2019இன் முதலரைப்பகுதியில் 23.2 சதவீத வளர்ச்சியொன்றினைக் காண்பித்த அதேவேளை சிமேந்து இறக்குமதிகள் 5.9 சதவீத சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன. சிமேந்து உற்பத்தியின் இவ்வளர்ச்சிக்கு சிமேந்துத் தயாரிப்பாளர்களின் இயலளவு அதிகரிப்பினால் பிரதானமாக துணையளிக்கப்பட்டிருந்தது.

- **ஒட்டுமொத்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 10 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் அத்துடன் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு என்பன 2019இன் முதலரைப்பகுதியில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்திருந்தன.** அதிகரித்த இறப்பர் தாள்கள், தட்டுக்கள், கீற்றுக்கள் மற்றும் நெகிழ்வுத்தன்மையான பட்டி என்பவற்றின் உற்பத்தியானது இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் வளர்ச்சிக்கு பங்களித்திருந்த அதேவேளை, பாடசாலைப் பைகள், பாடசாலைச் சப்பாத்துக்கள்

மற்றும் ஆண்களுக்கான சப்பாத்துக்கள் என்பவற்றின் உற்பத்தியின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக தோல் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் விரிவடைந்திருந்தன. அதேவேளை, இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத்துறையானது 2018இன் அதேகாலப்பகுதியில் காண்பித்த 6.8 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 2019இன் முதலரைப்பகுதியில் 3.3 சதவீத அதிகரிப்பொன்றறைப் பதிவுசெய்திருந்தது. இரசாயன உற்பத்திகளின் வளர்ச்சிக்கு அதிகரித்த வளமாக்கிகள், நிறப்பூச்சு மற்றும் ஆரோக்கியத் துவாய்களின் அதிகரித்த உற்பத்தி பெருமளவில் காரணமாக அமைந்திருந்தன.

- **2019இன் முதலரைப்பகுதியின் போது குடிபானங்களின் தயாரிப்புத் துணைத்துறையானது பியர் மற்றும் மென்பானங்கள் போன்ற மதுசாரம் அல்லாத குடிவகைகளின் அதிகரித்த உற்பத்தியினால் துணையளிக்கப்பட்டு விரிவாக்கமொன்றினைக் காண்பித்திருந்தது.** அதற்கமைய, குடிபானங்கள் துணைத்துறையானது 2018இல் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 6.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 5.4 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மீளாய்வுக் காலப்பகுதியின் போது நாட்டின் பல பிரதேசங்களில் நிலவிய வரட்சியான மற்றும் சூடான வானிலைநிலைமைகள் மென்பானங்கள் வகைகளுக்கு உயர்வான கேள்வியினைத் தோற்றுவித்திருந்தது. அதேவேளை, மதுபான உற்பத்திக்கு ஏற்புடைய கலால்வரி 2019இன் முதலாம் காலாண்டில் அதிகரிக்கப்பட்டது, இது மதுசாரங்களை வடித்தல், சீரமைத்தல் மற்றும் கலப்புச்செய்தல் என்பவற்றில் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவிப்பதனூடாக ஒட்டுமொத்த மதுபான உற்பத்தியை வீழ்ச்சியடையச்செய்திருந்தது.

- **தளபாடங்கள் தவிர்ந்த மர உற்பத்திகளின் தயாரிப்பு, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் மின்சார உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் தயாரிப்பு போன்ற துணைத்துறைகள் 2019இன் முதலரைப் பகுதியின் போது சுருக்கமொன்றினை காட்டிய அதேவேளை, தளபாடத்தின் தயாரிப்பானது விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது.** உருக்கு மற்றும் அலுமினியப் பட்டிகள் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தயாரிப்புத் துணைத்துறையின் மெதுவடைதலுக்கு காரணமாகவிருந்த (-7.7 சதவீதம்) அதேவேளை, மின்னியல் பலகத் தட்டுக்கள், ஒளியியல் தனிமைப்படுத்திகள் மற்றும் குளிரூட்டிகள் போன்ற தொடர்புபட்ட பாகங்கள் போன்றவற்றின் உற்பத்தி வீழ்ச்சியானது மின்சார உபகரண தயாரிப்புத் துணைத்துறையில் மெதுவடைவொன்றை (-2.1 சதவீதம்) ஏற்படுத்தியிருந்தது. நடுத்தர செறிவு நாரிழைப் பலகைகள் மற்றும் பலகைத் தட்டுக்கள் போன்றவற்றின் உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பிரதான காரணத்தால் தளபாடங்கள் தவிர்ந்த மர உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத்துறை 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 13.5 சதவீத விரிவாக்கலுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 9.8 சதவீத சுருக்கமொன்றினைப் பதிவுசெய்திருந்தது. எனினும், தளபாடங்கள் தயாரிப்புத் துணைத்துறையானது பிளாத்திக்குக் கதிரைகள், இறப்பர் மெத்தைகள் மற்றும் உருக்கு தளபாடங்கள் என்பவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் துணையளிக்கப்பட்டு முன்னைய ஆண்டில் பதிவாகியிருந்த 13.6 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் 4.2 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது.

- **புகையிலை உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் மீளத் தயாரித்தல் மற்றும் அடிப்படை உலோகங்கள் உள்ளடங்களாக கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் உள்ள ஏனைய துணைத் துறைகள் 2019இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியொன்றினைக் காண்பித்திருந்தன.** புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பானது 11.1 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்த அதேவேளை அச்சிடல் மற்றும் தயாரிக்கப்பட்ட ஊடகங்களை மீளத்தயாரித்தல் துணைத் துறை மற்றும் அடிப்படை உலோகங்களின் தயாரிப்புத் துணைத்துறை என்பன மீளாய்வுக் காலப்பகுதியில் முறையே 3.7 சதவீதம் மற்றும் 5.6 சதவீதம் சுருக்கத்தைப் பதிவுசெய்தன. புகையிலை உற்பத்தி மீது மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த வரிகள் புகையிலைத் தயாரிப்புக் கைத்தொழிலினையும் அதனூடாக புகையிலை உற்பத்தியினையும் பாதகமாக பாதித்திருந்தது. அதேவேளை, அச்சிடல் மற்றும் தயாரிக்கப்பட்ட ஊடகங்களை மீளத்தயாரித்தல் என்பனவற்றில் ஏற்பட்ட மெதுவடைவிற்கு அட்டைப் பெட்டிகள் மற்றும் நாணயத் தாள்கள் என்பவற்றின் குறைவடைந்த உற்பத்தி பெருமளவில் காரணமாக அமைந்திருந்தது. இதே சந்தர்ப்பத்தில், நெழிவடைந்த கடதாசி, அட்டைப் பெட்டிகள் மற்றும் கடதாசிப் பைகள் போன்றவற்றின் அதிகரித்த உற்பத்தியினால் துணையளிக்கப்பட்டு கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகளின் தயாரிப்பானது முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் பதிவாகிய 17.2 சதவீத சுருக்கமொன்றுடன் ஒப்பிடுகையில் மீளாய்வுக் காலப்பகுதியில் 5.9 சதவீத வளர்ச்சியியைப் பதிவுசெய்திருந்தது.

- **நாட்டின் கைத்தொழில் துறையினை ஊக்குவிப்பதற்கு விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தகம், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு என்பன பல்வேறுபட்ட கொள்கை வழிமுறைகளை எடுத்திருந்தன.** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சானது அனைத்து நிரல் அமைச்சுகள், அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், முப்படை, பொலிஸ், தனியார் துறை மற்றும் ஏனைய தொடர்புடைய

ஆர்வலர்களினதும் பங்கேற்புடன் தனது முதலாவது ‘சில்பசேன பொருட்காட்சி’ நிகழ்வை 2019 யூலை மாதத்தில் வெற்றிகரமாக நடாத்தியிருந்தது. மேலும், விஞ்ஞான, கனிமப் பொருள் அடிப்படையில் அமைந்த கைத்தொழில்களுக்காக சாதகமான சூழலொன்றினை உருவாக்குவதற்கு தேசிய கனிமப் பொருள் கொள்கையினை வகுப்பதற்காக தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு தொடர்ந்தும் உள்ளீடுகளை வழங்கியிருந்தது. அதேவேளை, தொழில்முயற்சியாளர்களினதும் வாய்ப்புமிக்க தொழில்முயற்சியாளர்களினதும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்காக நாடு முழுவதுமுள்ள அறிவக வளநிலையங்களினூடாக நடாத்தப்பட்ட தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டம் 2019இன் முதலரைப்பகுதியிலும் தொடர்ந்திருந்தது. தொழில்நுட்ப பிரயோகத்தினை விரிவுபடுத்துகின்ற அதேவேளை, பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சானது 15 மாவட்டங்களில் கிராமிய சமூகங்களை உள்ளடக்கி வெவ்வேறுபட்ட துறைகளின் கீழ் 33 விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விசேட கருத்திட்டங்களுக்காக ஏறத்தாழ ரூ.12.2 மில்லியனை 2019இல் ஒதுக்கீடு செய்திருந்தது. இதே சந்தர்ப்பத்தில், தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனமானது இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன வளமாக்கிகளின் பயன்பாட்டைக் குறைப்பதற்கு நுண்ணுயிர் உயிரியல் வளமாக்கியினை தொடர்ந்தும் விருத்திசெய்திருந்தது. தேசிய அடிப்படை கல்விகள் நிறுவனம், 2019இன் போது 15,000 ஏக்கர் நெற்பயிர் செய்கைக்கும் 2020இன் போது 50,000 ஏக்கர்களுக்கும் உயிரியல் வளமாக்கியினைப் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கின்றது. அதேவேளை, இலங்கை இயந்திரமின்னணுவியல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலமைந்த உற்பத்தி உருவாக்கம் மற்றும் வடிவமைப்பினைத் தொடங்குகின்ற கம்பனிகளுக்காக ‘என்டபிறைஸ் சிறிலங்கா’ கடன்திட்டத்தின் கீழ் நீண்டகாலக் கடன் வசதிகளை வழங்குவதற்கும் இயந்திரமின்னணுவியல் உற்பத்திகளை சான்றுபடுத்துவதற்கும் அமைச்சர்களின் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. ஏற்றுமதிச் சந்தைக்கென உயர் பெறுமதிசேர்க்கப்பட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை ஊக்குவிப்பதனை கவனத்திற்கொள்கின்ற கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினது ‘தொழில்முயற்சி கிராம அபிவிருத்தி’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 444 புதிய தொழில்முயற்சியாளர்கள் 2019இல் பயனடைவரென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை ‘சில்ப சவிய’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 48 தொழில்முயற்சியாளர்கள் நன்மையடைரென எதிர்பார்க்கப்படுகின்றது. இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களிலும் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட நன்மைபெறுவோர் பெண்களாவர்.

- **முதலீட்டுச் சபை, தொடர்புடைய பல்வேறு அமைச்சுக்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் சம்மேளனங்கள் என்பன உள்நாட்டு கைத்தொழில் துறையினை தொடர்ந்தும் ஊக்குவித்திருந்தன.** 2017இன் தொடக்கத்திலிருந்து அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தில் முதலீட்டை மேற்கொள்வதற்கு இரு கம்பனிகள் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளன. ஐ.அ.டொலர் 3,850 மில்லியன் முதலீட்டுப் பெறுமதியுடன் கூடிய சில்வர் பார்க் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையச் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய உடன்படிக்கை 2019இல் கைச்சாத்திடப்பட்டிருந்த அதேவேளை ஐ.அ.டொலர் 100 மில்லியன் பெறுமதி கொண்ட மதிப்பிடப்பட்ட முதலீடொன்றிற்காக லன்வா சங்ஸ்தா சிமேந்து கோப்பரேசன் (பிறைவேற்) லிமிடெட் 2018இல் உடன்படிக்கையொன்றினைக் கைச்சாத்திட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக சிங்கப்பூரின் சுகிஹ் எனர்ஜி இன்டநஷனல் நிறுவனம் அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்தில் மற்றுமொரு சுத்திகரிப்பு ஆலையொன்றை நிறுவுவதற்காக அமைச்சரவை ஒப்புதலளித்திருந்தது. எவ்வாறாயினும், இச்சுத்திகரிப்பு ஆலைக்கான இறுதி ஒப்புதலானது சூழல் தாக்க மதிப்பீட்டிற்கு உட்பட்டதாகும். அதேவேளை, முதலீட்டுச்சபை டயர்கள் மற்றும் அலுமினிய உணவுக் கொள்கலன்கள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட கைத்தொழில் உற்பத்திகளைத் தயாரிக்கும் நோக்கில் இலங்கையில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக பல்வேறுபட்ட தனியார் கம்பனிகளுடன் பல உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டுள்ள அதேவேளை பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற அதிகரித்த கேள்வியியை நிறைவு செய்வதற்கு பல்வேறுபட்ட பணிகளை வழங்கியிருந்தது. தேசிய வர்த்தக சம்மேளனம் 2019இன் முதலரைப்பகுதியில், நாட்டின் பல பாகங்களிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையினை அறிவூட்டல் மற்றும் தரமுயர்த்துதல் போன்றன தொடர்பில் அவற்றின் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது. மேலும், தேசிய வர்த்தக சம்மேளம் சுதேச மற்றும் மேற்கத்தேய மருத்து உற்பத்திகள் மற்றும் பணிகளை ஊக்குவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சுடன் இணைந்து 2019 யூலையில் ‘பன்னாட்டு நலக் கவனிப்புக் கண்காட்சி’ ஒன்றினை நடாத்தியிருந்தது. அதேவேளை, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது 2019இல் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை, தரமுயர்த்துவதற்கு உணவுத் தொழில்நுட்ப விடயப்பரப்பில் பணிகளை வழங்கியிருந்தது. அதேநேரம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை 2019இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் வலயங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தி தரமுயர்த்துவதற்கான அதன் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்திருந்தது.

### பணிகள்

- **பொருளாதாரத்தின் பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பணிகள் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 5.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.** இக்காலப்பகுதியின் போதான வளர்ச்சிக்கு பிரதானமாக நிதியியல் பணிகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் சாதகமாக பங்களித்திருந்தன. மேலும், ஏனைய தனிநபர் பணிகள், உண்மைச் சொத்து நடவடிக்கைகள், பொது நிர்வாகப் பணிகள், காப்புறுதி, தொலைத்தொடர்பு, தொழில்சார் பணிகள், தகவல்தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள், கல்வி மற்றும் மனித நல நடவடிக்கைள் என்பன உள்ளடங்களாக ஏனைய பணி நடவடிக்கைகள் ஆண்டின் முதலரைப்பகுதியின் போது பணிகள் வளர்ச்சிக்கு சாதகமாக பங்களித்திருந்தன. எனினும், இக்காலப்பகுதியின் போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பாதகமான தாக்கத்தின் பிரதான காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் சுருக்கமடைந்திருந்த அதேவேளை போக்குவரத்து நடவடிக்கைகள் சிறிதளவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன.

### மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

- **மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தன.** 2018இன் தொடர்பான காலப்பகுதியில் ஏற்பட்ட 5.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் விரிவாக்கம் இவ்வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. எனினும், சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகள் மீது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பாதகமான தாக்கத்தின் பிரதான காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் பணிகள் நடவடிக்கைகள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய முறையே 7.1 சதவீதம் மற்றும் 3.4 சதவீத வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்திருந்த அதேவேளை போக்குவரத்து நடவடிக்கைகள் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. அதேவேளை, இக்காலப்பகுதியில் தபால் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 2.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் போது 2.9 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது.

### தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள்

- **2019இன் முதலரைப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 10.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.9 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தில் வளர்ச்சியடைந்திருந்தன.** இவ்வுயர்வான வளர்ச்சிக்கு 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய தொலைத்தொடர்புப் பணிகளின்10.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 10.9 சதவீதமான கணிசமான வளர்ச்சி முக்கிய காரணமாக அமைந்திருந்தது. மேலும், தகவல் தொடர்பாடல் செய்நிரலாக்கல் ஆலோசனை மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகள் என்பனவும் நாட்டின் தகவல் தொழில்நுட்ப தொழிற்துறையில் முன்னேற்றங்களைப் பிரதிபலித்து 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 11.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 11.9 சதவீத உயர்வான வீதத்தினால் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் அதேபோன்று ஒலி மற்றும் காணொளி உற்பத்திகள், 2018இன் முதலரைப்பகுதியின் போது பதிவாகிய 2.0 சதவீத சுருக்கத்திற்கு எதிராக 2019இன் முதலரைப்பகுதியின் போது 4.6 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்வதனூடாக மீட்சியடைந்திருந்தது.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

- **நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 8.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.** இவ்வளர்ச்சிக்கு பெரும்பாலும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 11.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் போது 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் பங்களித்திருந்தன. மேலும், வதிவிடச் சொத்துடமை உள்ளடக்கிய உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 5.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 1.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும், காப்புறுதி, மீள்காப்புறுதி

2

மற்றும் ஓய்வூதிய நிதியளித்தல் நடவடிக்கைகளும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 7.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியின் போது 7.3 சதவீதம் கொண்ட உயர்வான வீதத்தில் வளர்ச்சியடைந்திருந்தன.

## தொழில்சார் நிபுணத்தவப் பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள்

- **தொழில்சார் நிபுணத்துவ பணிகள் மற்றும் ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2.9 சதவீதத்தினால் விரிவடைந்திருந்தன.** பதிவுசெய்யப்பட்ட இவ்வளர்ச்சிக்கு 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 3.0 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சிவீதத்தை காட்டியிருந்தஏனைய தனியாள் பணி நடவடிக்கைகளின் விரிவாக்கம் முக்கியமாக பங்களிப்புச் செய்திருந்தது. மேலும், இக்காலப்பகுதியில் தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் 2018இன் முதலரைப்பகுதியில் பதிவாகிய 5.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.0 சதவீதத்தினால் விரிவடைந்திருந்தது.

## பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிகள் நடவடிக்கைகள்

- **பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணிகள் நடவடிக்கைகள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்ப்பட்ட மந்தமான செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.** இத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் மேல்நோக்கிய போக்கானது பிரதானமாக 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 0.8 சதவீத சுருக்கத்திற்கெதிராக 2019இன் முதலரைப்பகுதியின் போது 1.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த பொது நிர்வாக மற்றும் பாதுகாப்புடன் தொடர்புபட்ட பணிகளில் ஏற்பட்ட மீட்சியினால் தூண்டப்பட்டிருந்தது. மேலும், கல்விப் பணிகள் 2018இன் முதலரைப்பகுதியில் பதிவாகிய 3.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இக்காலப்பகுதியில் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, மனித நல நடவடிக்கைகள், வதிவிடக் கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் என்பன 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 1.6 சதவீத சுருக்கத்திற்கெதிராக 2019இன் முதலரைப்பகுதியில் 0.8 சதவீதத்தினால் மீட்சியடைந்திருந்தது.

## செலவினம்

- **பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தை உள்ளடக்குகின்ற மொத்த உள்நாட்டுச் செலவினமானது நடைமுறை விலைகளில் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 10.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 0.2 சதவீதம் கொண்ட சிறியளவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்திருந்தது.** இம்மெதுவிற்கு 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 9.9 சதவீத வளர்ச்சிக்கு எதிராக ஆண்டின் முதலரைப்பகுதியின் போது 13.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்த முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்டிருந்த கணிசமான வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்திருந்தது. முதலீட்டுச் செலவினத்தின் கூறுகளைக் கருத்திற்கொள்கையில், ஆண்டின் முதலரைப்பகுதியின் போது மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் சாதகமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்த போதிலும் பொருட்பட்டியல்கள் மற்றும் பெறுமதி வாய்ந்தவைகளின் குறைவான கையிருப்புக்களைக் கையேற்றல் என்பவற்றின் மாற்றங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவான வீழ்ச்சி மொத்த முதலீட்டுச் செலவினத்தின் சுருக்கத்திற்கு வழிவகுத்திருந்தது. நடைமுறை விலையில் நுகர்வுச் செலவினமானது மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்து 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 10.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் போது 5.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. அதேசந்தர்ப்பத்தில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது இறக்குமதிகளின் வீழ்ச்சிக்கு மத்தியில் ஏற்றுமதிகளின் உயர்வான வளர்ச்சியினால் துணையளிக்கப்பட்டு நடைமுறை விலைகளில் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 21.6 சதவீத சுருக்கத்திற்கெதிராக 2019இன் முதலரைப்பகுதியில் 41.9 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. இது தொடர்பில், பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதியானது நடைமுறை விலைகளில் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 12.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 13.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. அதேவேளை, பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதிகள் 2018இன் முதலரைப்பகுதியில் பதிவாகிய 14.8 சதவீத வளர்ச்சிக்கெதிராக இக்காலப்பகுதியில் 1.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுச் செலவினத்தையும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியினையும் உள்ளடக்குகின்ற மொ.உ.உற்பத்தியானது 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய 9.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் நடைமுறைச் சந்தை விலைகளில் 3.8 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்திருந்தது.

- **மொத்த உள்நாட்டுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2018இல் பதிவாகிய 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.16,436.4 பில்லியன் தொகைக்கு 6.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் இவ்வெறிவுசெய்யப்பட்ட வளர்ச்சிக்கு நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் ஆகிய இரண்டினதும் விரிவாக்கஙளினால் துணைபுரியப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது உலகப் பொருளாதார வளர்ச்சியின் மெதுவடைவினால் சுருக்கமடையக்கூடியதாயினும் பொருட்கள் மற்றும் பணிகள் இறக்குமதிகள் மீதான மெதுவடைவு மற்றும் ஏற்றுமதிகளின் அதிகரிப்பு என்பவற்றின் காரணத்தால் 2018இல் பதிவாகிய 10.3 சதவீத சுருக்கத்திற்கெதிராக 2019இல் 10.6 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2018இல் பதிவாகிய 7.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 7.2 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

### நுகர்வு

- **பொருளாதாரத்தின் முக்கிய கூறான நுகர்வுச் செலவினம் நடைமுறைச் சந்தை விலைகளில் 2018இல் பதிவாகிய 8.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.11,929.6 பில்லியன் தொகைக்கு 2019இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, நுகர்வுச் செலவினமானது 2018இல் பதிவுசெய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 78.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 77.0 சதவீதமாக இருக்கும். தனியார் மற்றும் அரசாங்க நுகர்வு ஆகியஇரண்டு வகைகளிலும் சில மெதுவடைவுகள் எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் இவை மொத்த நுகர்வுச் செலவினத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிப்புச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினமானது 2018இல் பதிவாகிய 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 5.1 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. 2019இன் முதலரைப்பகுதியின் போதான அரசாங்க செலவினத்தின் தரவுகளையும் இலங்கை மத்திய வங்கியின் எதிர்வுகூறல்களையும் கருத்திற்கொள்கின்ற போது பொது நுகர்வுச் செலவினமானது 2018உடன் ஒப்பிடுகையில் 2019இல் மேலும் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### முதலீடு

- **நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச் செலவினமானது 2018இல் பதிவாகிய 6.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 9.1 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீட்டுச் செலவினம் 2018இன் 28.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் 29.1 சதவீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் எதிர்வுகூறல்களின் அடிப்படையில், தேர்தல் சுழற்சியின் காரணமாக கட்டடவாக்கங்களுடன் தொடர்புபட்ட முதலீட்டில் சில மேம்படுத்தல்கள் காணக்கூடியதாகவிருக்கின்ற போதிலும் 2018உடன் ஒப்பிடுகையில் 2019இல் வீழ்ச்சியடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 2019இல் முதலீட்டின் வளர்ச்சிக்கு தனியார் முதலீட்டுச் செலவினம் பெரும்பாலும் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொள்வனவு/நிருமாணித்தல் மற்றும் திருத்த நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தனிப்பட்ட வீடமைப்பு நோக்கங்களுக்காக தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்படுகின்ற கொடுகடனானது 2018 யூன் இறுதியில் உள்ளவாறு பதிவாகிய 14.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியில் உள்ளவாறு 7.6 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியின் போது சீமேந்து கிடைக்கப்பெறும் தன்மையானது ஒட்டுமொத்த முதலீடுகளின் முக்கிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்டவாக்க நடவடிக்கைகளில் விரிவாக்கமொன்றினைக் குறித்துக்காட்டி மீட்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் முதலரைப்பகுதிக்கான வர்த்தக சுட்டெண்களுக்கமைய

வரைபடம் 2.6

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முதலீடு மற்றும் சேமிப்புக்கள்(அ)




(அ) தரவுகள் 2010 அடியாண்டிற்கான மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஆ) இலங்கை மத்திய வங்கி நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படையிலான மதிப்பீடுகள்

*மூலங்கள்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2

இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதி மற்றும் ஏனைய முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி என்பன ஆண்டின் முதலரைப்பகுதியின் போது சுருக்கமடைந்திருந்தன.

- **2019இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 1,427.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 553.2 மில்லியனாக**[1] **61.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.** தொடர்புடைய காலப்பகுதியின் போது நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்களின் சுருக்கத்திற்கு முறையே 75.8 சதவீத மற்றும் 11.1 சதவீத வீழ்ச்சியினைப் பதிவுசெய்திருந்த உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் மற்றும் பணிகள் துறைகளுக்குமான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன பிரதான காரணமாக அமைந்திருந்தன. எனினும், மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் ஏறத்தாழ 4இல் ஒரு பங்கிற்கு வகைகூறுகின்ற தயாரித்தல் துறையுடன் தொடர்புடைய வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மீளாய்வுக் காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 138.6 மில்லியனாக 10.7 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்திருந்தது. வேளாண்மைத் துறைக்கான நேரடி வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2019இன் முதலரைப்பகுதியின் போதும் குறைந்த மட்டத்திலே தொடர்ந்தும் காணப்பட்டது.

## சேமிப்புக்கள்

- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வீட்டுத்துறை மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** வீட்டுத்துறை சேமிப்புக்கள், 2018இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 21.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 23.0 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. வீட்டுத்துறை சேமிப்புக்களில் ஏற்படும் இவ்வதிகரிப்பானது தனியார் சேமிப்புக்களின் விரிவாக்கத்தினதும் அரசாங்க குறைச் சேமிப்புக்களின் மெதுவடைதலினதும் இணைந்த பெறுபேறொன்றாக இருக்கும். அதேவேளை, ரூபாய் நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து வரும் தேறிய முதன்மை வருமானம் 2019இல் உயர்வான வீதமொன்றில் சுருக்கமடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் 2018உடன் ஒப்பிடுகையில் மிதமான வேகமொன்றில் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகின்றது. இதன் விளைவாக, தேசிய சேமிப்புக்கள் 2018இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 25.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.5 சதவீதமாக இருக்குமென எறிவுசெய்யப்படுகின்றது. மேலும், சேமிப்புகள் - முதலீட்டு இடைவெளியானது 2018இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.6 சதவீதத்திற்கு குறுக்கமடையும்.

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **உண்மை நியதிகளில் இலங்கைப் பொருளாதாரம் 2020இல் ஏறத்தாள 3.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.** வளர்ச்சியானது பரந்த அடிப்படையில் அமைந்ததாகவும் அனைத்து முக்கிய பொருளாதார நடவடிக்கைகள் மூலம் சாதகமாகப் பங்களிக்கப்பட்டதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், உள்நாட்டு நிச்சயமற்றத்த தன்மை மூலம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த முதலீட்டாளர் நம்பிக்கைகள் தனியார் முதலீடுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நுகர்வோர் நடத்தை இயல்பு நிலைக்கு திரும்புவதற்கேற்ப தனியார் செலவிடுதலில் படிப்படியான அதிகரிப்புடன் ஒன்றினைகின்ற எதிர்வருகின்ற தேசிய தேர்தல்களில் அரசாங்க செலவிடுதலில் எதிர்பார்க்கப்பட்ட திடீர் அதிகரிப்பானது, ஆண்டின் போது உள்நாட்டுக் கேள்வியை வலுப்படுத்தும். பொருளாதாரமானது முக்கிய வர்த்தக பங்காளர் பொருளாதாரங்களுடனான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளிலிருந்தும் உலக எரிபொருள் விலைகள் குறைவடைதலிலிருந்தும் தொடர்ச்சியாக நன்மைபெறும். ஏற்றுமதி சொத்துப் பட்டியலை மேலும் பன்முகப்படுத்தல் மற்றும் வர்த்தகப்படுத்தத்தக்க துறையினை மேம்படுத்தல் என்பன பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையின் நிலையான மேம்படுத்தலுக்கு துணையளிக்கும்.

- **2020இல் வேளாண்மைத்துறை செழிப்படையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** கமத்தொழில் திணைக்களத்தின்படி 2018/19 பெரும்போகத்தினதும் 2019 சிறுபோகத்தினதும் மிகை உற்பத்தி, 2020 சனவரி வரை வீட்டலகுக்கான கேள்வியை நிறைவுசெய்வதற்கு போதுமான அரிசி கிடைக்கப்பெறுவதற்கு வழிவகுத்துள்ளது. வளிமண்டலத் திணைக்களம், 2019இன் ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களின் போது பாரிய மழைவீழ்ச்சிகளை எதிர்வுகூறிய போதிலும், முக்கிய நீர்த் தேக்கங்களின் ஏற்கனவே காணப்படும் குறைவான நீர்மட்டங்களை ஈடுசெய்வதற்கு இதுவரையில்

---

1 வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொகையானது முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளிட்ட பெறுகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் இது அத்தியாயம் 5இல் எடுத்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் மதிப்பீடுகள் முதலீட்டுச் சபையல்லாக் கம்பனிகளின் உள்ளடக்கத்தின் காரணமாக வேறுபடக்கூடும்.

கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி போதாமையாக இருக்கலாம். இது 2019/20 பெரும்போக காலத்திற்குத் தேவையான நீர் கிடைக்கப்பெறுகின்ற தன்மைக்கு அச்சுறுத்தலொன்றினை தோற்றுவிக்கின்றது. எனவே, காலநிலை இடர்நேர்வுக் குறைப்பு, வரட்சி பதிலிறுத்தல் இடர்நேர்வுகளுக்காக வழிமுறைகளையும் தயார்நிலையினையும் பின்பற்றுதல் என்பவற்றின் மீதான அதிகரித்தக் கரிசனைகள் தேவையாகக் காணப்படுகின்றது. 2019இன் முதலரைப்பகுதியின் போது உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் விலைகளின் தொடர்ச்சியான வீழ்ச்சி உள்நாட்டு உற்பத்தியை பலவீனமடையச் செய்துள்ள போதிலும், இப்பொருட்களை இறக்குமதி செய்கின்ற பொருளாதாரங்களில் சாத்தியமான மீட்சியுடன் இவ் ஏற்றுமதிகளுக்கான உலகக் கேள்வி புத்துயிர் பெறும். அதேவேளை, தெங்கு உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியானது தேங்காயினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிலிருந்தான் அதிகரிக்கின்ற கேள்விகளுக்கு ஈடுசெய்து தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்கமளிக்கும். மேலும், சோளம், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், உழுந்து மற்றும் பெரிய வெங்காயம் போன்ற பல்வேறுபட்ட களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தி, சாதகமான வானிலை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு தொடர்ந்தும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பால் தொழிற்சாலைகளின் உற்பத்தி இயலளவை மேம்படுத்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தி இயலளவை அதிகரிக்கின்ற விலங்கு வைத்தியப் பணிகளின் முறையான நடைமுறைப்படுத்தல் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு 2020 காலப்பகுதியின் போது உள்நாட்டு பால் தேவையில் ஏறத்தாழ 45 சதவீதத்தை உள்நாட்டுப் பாற்பண்ணைக் கைத்தொழில் பூர்த்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது, மேலும், உள்நாட்டு சீனி உற்பத்தியானது 2020இல் சீனிக்கான உள்நாட்டு மொத்த கேள்வியின் ஏறத்தாழ 12 சதவீதத்தினை பூர்த்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியானது ஆழ்கடல் மீன் உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி என்பவற்றின் விரிவாக்கத்துடன் 2020இல் முன்னேற்றமொன்றினைக் காண்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வேளாண்மைத் துறையில் இவ்வழங்கல் பக்க அபிவிருத்திகளுடன் 2020இல் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வேளாண்மைத் துறை சாதகமாக பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **முதலீட்டாளர் நம்பிக்கை மேம்படும் என்ற ஊகத்துடன் 2020இல் கைத்தொழிலுடன் தொடர்புடைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தும் சாதகமான உத்வேகத்தை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகள் திட்டம் சலுகைகள் மற்றும் தனியார் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு உத்வேகம் வழங்கி திட்டமிடப்பட்டவாறான அரசாங்க கட்டடவாக்க செயற்றிட்டங்களின் நிறைவேற்றம் என்பவற்றிலிருந்து நன்மையடைந்து தயாரித்தல் மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சியானது கைத்தொழில் துறையின் வளர்ச்சியினைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மத்திய அதிவேக பாதைப் பணிகள் தொடர்ந்து இடம்பெறுதல் மற்றும் மென் புகையிரதப் போக்குவரத்து முறைமையின் முதலாவது கட்டம் போன்ற அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் துரிதப்படுத்தலுடன் கட்டடவாக்க நடவடிக்கைகள் உயர்வான வீதத்தில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொழும்பு நிதியியல் நகரில் நிருமாணிக்கப்படவுள்ள கட்டடங்களுக்கு மேலதிகமாக புதிய களனிப் பாலத்திலிருந்தான உயர்த்தப்பட்ட வீதி மற்றும் துறைமுக நகரை கொழும்பு வர்த்தக மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கின்ற நிலக்கீழ் வீதி போன்றன உள்ளடங்கலாக கொழும்பு நகரினுள்ளும் அதற்கு வெளியிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பண்டாரநாயக்க பன்னாட்டு விமானநிலையத்தில் இரண்டாவது முனையத்தின் அபிவிருத்தி மற்றும் மூன்று விமானநிலையங்கான யாழ்ப்பாணம் (பலாலி), இரத்மலான, மட்டக்களப்பு விமானநிலையங்களைச் சர்வதேச விமானநிலையங்களாக தரமுயர்த்துதல் என்பன வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்யுமென எதிர்பார்க்கப்படும் விமானப் பணிகளுடன் தொடர்புடைய கட்டடவாக்கச் செயற்றிட்டங்களாகும். நகர புத்துயிரளித்தல் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பாரிய எண்ணிக்கையிலான நகர வீடமைப்பு செயற்றிட்டங்கள், தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படும் பல்வேறு கூட்டான அபிவிருத்திக் செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக வசதியான நகர வீடமைப்புக்கான கேள்வியினை ஓரளவிற்கு நிறைவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, தயாரித்தல் நடவடிக்கைகள், குறிப்பாக புடவை மற்றும் ஆடை அத்துடன் உணவு மற்றும் குடிபானத் துறைகளில் ஈடுபட்டுள்ள தயாரித்தல் நிறுவனங்கள், கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு கணிசமான பங்களிப்பொன்றினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. இலங்கை அடிப்படையில் சிறிய பெறுமதிமிக்க சந்தைகள் மீது கவனம் செலுத்துவதனால் ஆடை தயாரித்தலில் வளர்ச்சியானது முக்கிய ஏற்றுமதி அமைவிடங்களிலிருந்து முன்னேற்றகரமான கேள்வியினால் துணையளிக்கப்படும் அதேவேளை, உணவு மற்றும் குடிபானத் தயாரித்தலில் வளர்ச்சியானது சுற்றுலாத் துறையிலிருந்தான கேள்வி படிப்படியாக வளர ஆரம்பிப்பதற்கு மத்தியில் முதன்மையாக உள்நாட்டுச் சந்தையினால் தூண்டப்படும். புடவை மற்றும் ஆடைத் தயாரித்தல் நடவடிக்கைகளில் நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகள் பங்களிப்புச் செய்யும். இதற்கு மேலதிகமாக, ஏற்றுமதி சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்தலிலிருந்து கைத்தொழிலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் பயனடைவதுடன் இது உலகலாவிய

பெறுமதிச் தொடர்புச் சங்கிலியுடன் நாடு மிகவும் ஒருங்கிணைக்கப்படுவதனை இயலச்செய்கின்ற அதேவேளை, கனிம உற்பத்திகள் போன்ற ஏனைய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஊக்குவிக்கும். ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அதிகரித்துவரும் வர்த்தகப் பதற்றங்களால் அதிகளவில் தயாரிப்புத் துறையானது பாதகமான விளைவுகளுக்குட்படுவதனால் உள்நாட்டு தயாரிப்புத் துறையின் எதிர்கால முன்னேற்றமானது இயலளவு பயன்பாட்டினை உச்சப்படுத்தல், தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரித்தல், உற்பத்தி மற்றும் பணித் தரத்தினை மேம்படுத்தல், வழங்கல் சங்கிலி கூட்டுமுயற்சிகளை அதிகரித்தல் மற்றும் பன்னாட்டு வர்த்தக இணைவுகளை மேம்படுத்தல் என்பவற்றின் ஊடாக நிலைநிறுத்தப்படக்கூடியதாக இருக்கும். எனினும், இசைவான கொள்கைகள், முதலீட்டாளர் சிநேகம்மிக்க அரசாங்கப் பொறிமுறைகள் அதேபோன்று தேவையற்ற பொருட்களை குவித்தலுக்கெதிரான சட்டங்கள் என்பன நிலைபெறத்தக்க கைத்தொழில் அபிவிருத்திக்கான முன்தேவைப்பாடுகளாக காணப்படுகின்றன. கைத்தொழில் நடவடிக்கைகள் முழுமையான வாய்ப்பினை பயன்படுத்தும் பொருட்டு தேர்ச்சி பொருத்தமின்மை, குறைவான தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் இறுக்கமான தொழிலாளர் சட்டங்கள் போன்ற கட்டமைப்பு சார்ந்த தடைகள் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகளாக் இனங்காணப்பட்டுள்ளன. முன்னோக்கிப் பார்க்கையில், முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களை தயாரிப்பாளர்கள் அதிகளவில் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பதற்கு விசேடமாக தொழில்நுட்ப மாற்றல், விஞ்ஞான மற்றும் புத்தாக்க விடயப்பரப்புகள் போன்றன தொடர்பில் சாதகமான கொள்கைகள் தேவைப்படுகின்ற அதேவேளை அதேவேளை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

- **பணிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இத்துறையில் காணப்படும் அனைத்து முக்கிய பொருளாதார நடவடிக்கைகளினாலும் துணையளிக்கப்பட்டு 2020 காலப்பகுதியில் வளர்ச்சியைத் தூண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** இவ்வளர்ச்சியானது பரந்த அடிப்படையில் காணப்படுவதுடன் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், நிதியியல் பணிகள், காப்புறுதி, தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் போன்ற பொருளாதார நடவடிக்கைகள் அதேபோன்று பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கல்வி மற்றும் நலம் தொடர்புபட்ட பணி நடவடிக்கைகள் போன்ற அரசாங்கத் துறையினால் தூண்டப்பட்ட பணிகள் நடவடிக்கைகளால் துணையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் பாதகமாக பாதிக்கப்பட்டிருந்த விடுதிகள் மற்றும் உணவகங்கள் அத்துடன் ஏனைய தனிப்பட்ட பணிகள் உள்ளடங்கலாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான நடவடிக்கைகள் போன்ற பணி நடவடிக்கைகள் ஆண்டுகாலப்பகுதியில் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாக் கைத்தொழில் துறையானது அதன் இயலளவை உத்தமப்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும் நீண்டகால உபாயங்களைக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. பணி நடவடிக்கைகளில் பெரும்பாலானவை ஒன்றுக்கொன்று துணையாகக் காணப்படுவதுடன் அவை பரந்த அடிப்படையான வளர்ச்சிக்கு துணையளிக்கும். உதாரணமாக வீதி/அதிவேகப் பாதைகளின் விரிவாக்கல் மற்றும் புகையிரதப் பாதை வலையமைப்புகள் அதேபோன்று விமானநிலையங்களின் விரிவுபடுத்தல் மற்றும் தரமுயர்த்தல் என்பவற்றின் நேரடிப் பயனாளியாக போக்குவரத்து நடவடிக்கைகள் காணப்படும். அதிகரித்த தொடர்புத்தன்மையானது வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் அதேபோன்று சுற்றுலாப் பயணிகளையும் ஈர்ப்பதற்கு இலங்கையினை இயலச்செய்கின்றது. மேலும், சிறந்த பொதுப் போக்குவரத்து வழி வகைகள் பொருளாதாரத்திற்கு மேலும் பெறுமதியினைச் சேர்த்து தனிப்பட்ட போக்குவரத்து முறைகளை மாற்றீடு செய்யப்படல் வேண்டும். இதேபோன்று ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள், நலக் கவனிப்பு மற்றும் ஆரேக்கியம், உயர்கல்வி, தகவல்தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஆலோசனைப் பணிகள் போன்ற உயர் பெறுமதிமிக்க பணிகளின் ஏற்றுமதியாளராக இலங்கை தரமுயர்த்தப்படவேண்டிய தேவையுள்ளது. செயற்கையான நுண்ணறிவு இயலச்செய்துள்ள தீர்வுகள், மரபுசார்ந்த தகவல் தொழில்நுட்ப தளங்களை மாற்றீடு செய்வதன் மூலம் அடுத்த புரட்சிக்கு வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுவதனால், உலக அரங்கிலிருந்து தோன்றுகின்ற சாத்தியமான கேள்விகளுக்கு ஈடுகொடுப்பதற்கு தகவல் தொழில்நுட்ப கைத்தொழிலின் வாய்ப்புக்களை தரமுயர்த்துவதும் முக்கியமானதாகும். அதேவேளை, முதலீட்டினையும் தொழில்நுட்பத்தினையும் கவருவதற்கு முறையான உபாயங்களை இயலச்செய்கின்ற சூழலுடன் சேர்த்து அத்தகைய பணிகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது அத்தியாவசியமிக்கதாக விளங்குகின்றது. கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய விடயப்பரப்புகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்தல் என்பன உயர்பெறுமதிமிக்க பணிகளின் ஏற்றுமதியாளராக இலங்கையை நிலைநிறுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் முன்னுரிமைகளில் முக்கியமாக இடம்பெறல் வேண்டும்.

- **முதலீட்டு நடவடிக்கைகள் தனியார் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான உயர்வான பங்களிப்பினால் தூண்டப்பட்டு 2020இல் தொடர்ந்தும் அதன் வளர்ச்சிப் போக்கில் உத்வேகம் அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நேரடி வெளிநாட்டு முதலீடுகளுடன் ஒன்றிணைந்த பாரியளவிலான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் மீதான தனியார் முதலீட்டுச் செலவினமானது மொத்த முதலீட்டு நடவடிக்கைகளின்

வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும். மேலும், கணிசமான எண்ணிக்கையிலான வதிவிட மற்றும் கலப்பு மெய்யாதனச் செயற்றிட்டங்களும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டத்தின் முதலீடுகளும் தனியார் முதலீட்டு வளர்ச்சிக்குப் பங்களிக்கும். மேலும், தொடர்ச்சியான முன்னுரிமையளிக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் சேர்த்து அரசாங்க முதலீடுகளும் சாதகமாக பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. விரும்பிய தனியார் முதலீட்டு மட்டங்களை அடைவதற்கு ஒத்திசைவற்ற கொள்கைகளின் காரணமாக மோசமடைந்துள்ள முதலீட்டாளர் நம்பிக்கையினை வலுப்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

- **சேமிப்புக்களை விரும்பிய மட்டத்தில் பேணுவது பொருளாதார வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதில் இன்றியமையாததாகும்.** இந்நோக்கில், அரசாங்க சேமிப்புகளை எய்துவதும் அதனை சாதகமான மட்டத்தில் உறுதியாகப் பேணுவதும் முக்கியமாக விளங்குகின்றது. அரசாங்கத்தின் வருவாயை அதிகரிப்பதற்கு முன்மதிமிக்க வழிமுறைகளை உருவாக்குவதன் மூலம் இறைத்திரட்சிக்கான தொடர்ச்சியான முயற்சி முதலீட்டுக்கான உள்நாட்டுச் சேமிப்புகளையும் இடவசதிகளையும் மேம்படுத்துவதற்கு பங்களிக்கும். மேலும், தற்போதைய தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினைத் தொடர்கின்ற அதேவேளை, குறைந்த மட்டத்திலும் நிலையான மட்டத்திலும் பணவீக்கத்தினைப் பேணி நீண்ட காலத் தனியார் சேமிப்புக்களை ஊக்குவிப்பது சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை கட்டுப்படுத்துவதற்கு முக்கியமானதாகக் காணப்படுவதுடன் உயர்வான முதலீட்டுச் செலவினத்திற்கான கேள்விக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியளித்தல் மூலங்களில் தங்கியிருத்தலினூடாகக் குறைவடையும்.

2

2